உ
சிவமயம்



# அமரர்
# திருமதி. கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

10.09.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் திருவுருவாய் அறிவுச் சுடர் விளக்காய்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்

நான்கு தசாப்தகாலம் நல்மாணவரை

உருவாக்கி ஊரார் போற்ற உத்தமியாய் வாழ்ந்து

குடும்பத்தின் வளர்ச்சிக்காய் பாடுபட்டு

உழைத்து எம்மைக் கல்வியறிவூட்டி

நற்பிரஜைகளாய் வாழ வழிகாட்டி

தெய்வத்துட் கலந்த எங்கள் அன்பு

அன்னைக்கு இம்மலரை காணிக்கையாக

சமர்ப்பணம் செய்கின்றோம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அன்னைமடி
21
10
1931

இறைவனடி
11
08
2017



# அமரர்.
# திருமதி. கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு
## ( ஓய்வு பெற்ற ஆசிரியை )

### - திதி வெண்பா -

நிகழும் ஏவிளம்பி வருடமிது நீங்காத துயரளித்து
நீத்தார் தன்னுடலை ஏரையூர் தந்த மாணிக்கம்
ஆடிமாத வெள்ளி வாரமதில் இவராவி பிரிந்த திதி
அபரபக்கத்து சங்கட சதுர்த்தி யெனக் காண்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபுராணம்



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம் பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரை கெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரை கடலோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருகிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் சித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய் மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுள் சிலதேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திருள்பேரு
விடங்கண் விடைப்பாகன்
பல்லாண்டென் னும்பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு அவர்களின் வாழ்க்கை வரலாறு

மட்டக்களப்பு வெட்டவளவைச் சேர்ந்த செல்லத்தம்பி அவர்களுக்கும் மட்டக்களப்பு சிங்களவாடியை பூர்வீகமாகவும் ஏறாவூர் 5ம் குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுமாணிக்கம் அவர்களுக்கும் புத்திரியாக 1931ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21ம் நாள் ஏறாவூரில் அவதரித்தார். இவருக்கு இரு சகோதரர்கள் இருந்தனர். மூத்த சகோதரர் (அண்ணன்) காலஞ்சென்ற திரு. நவரெத்தினையா (விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர்), இளைய சகோதரர் (தம்பி) காலஞ்சென்ற திரு. கேதார கிருஷ்ணானந்தா (பிரதம குடிவரவு, குடியகல்வு அதிகாரி).

இவர் தனது ஆரம்பக் கல்வியை ஏறாவூர் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கற்று இடைநிலைக் கல்வியை கல்முனை கார்மேல் மகளிர் கல்லூரியில் சிறிதுகாலம் தொடர்ந்ததன் பின் இடைநிலை, உயர்நிலைக் கல்வியை மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் கல்லூரியில் தொடர்ந்தார்.

இவர் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் காட்டிய திறமை காரணமாக அருட்சகோதரிகளின் பேரன்பிற்குரிய மாணவியாகத் திகழ்ந்தார். S.S.C பரீட்சையில் மிகத் திறமையாக சித்தி பெற்றார். அருட்சகோதரிகள் இவரிடம் வைத்த நம்பிக்கை காரணமாக இவரைச் சிபாரிசு செய்து திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் பயிற்சி ஆசிரியையாக அழைத்துச் சென்றனர். அங்கு சிறிதுகாலம் கடமையாற்றினார். பின் 1950ல் ஆசிரியையாக நியமனம் பெற்று கல்குடா வெம்பு பாடசாலையில் கடமையாற்றினார். பின் இடமாற்றம் பெற்று மட் / சித்தாண்டி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பாடசாலையில் கற்பித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955ல் சித்தாண்டியில் பிரபலம் பெற்ற வேலாயுதம் விதானையாரின் பேரனும் சிவனடியான் கனகம்மா ஆகியோரின் புதல்வனும், டாக்டர். செல்லத்தம்பி, அருணாச்சலம் (பிரதம தபால் அதிபர்) ஆகியோரின் மருமகனுமாகிய திருநாவுக்கரசு ஆசிரியர் அவர்களைத் திருமணம் செய்தார். 1960ம் ஆண்டு ஏறாவூர் மெதடிஸ்தமிஷன் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றார். இப்பாடசாலையில் 26 வருடங்கள் சேவையாற்றி சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்கி ஏறாவூர் 5ம் குறிச்சி மக்களின் நன்மதிப்பையும் பெற்று 1986ம் ஆண்டு தனது 55வது வயதில் ஓய்வு பெற்றார்.

இவர் வழிகாட்டிய பல மாணவர்கள் அரச, தனியார் நிறுவனங்களில் உயர் பதவியை வகிக்கின்றனர்.

எனவே இவரது சேவையைப் பாராட்டி 2007ம் ஆண்டு சித்தாண்டி ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் இவரை அழைத்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தது.

அதே போல் 2011ம் ஆண்டு மட்/ஏறாவூர் விபுலானந்த வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியோர் அவரை அழைத்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவித்தனர்.

இவரது இல்லற வாழ்க்கையின் நல்லறத்தின் பயனாக சந்திரபவானி, ரவிச்சந்திரன், நிமலச்சந்திரன், சுபாஷ்சந்திரன், சுபாஷினி, நிமலினி ஆகிய ஆறு குழந்தைச் செல்வங்களையும் பெற்றுக் கொண்டு, அவரது உத்தியோக வாழ்க்கையின் மத்தியிலும் அவர்களை சீருடனும் சிறப்புடனும் பேணி கல்வியில் மேன்மையடையச் செய்தார். பிள்ளைகள் எவரும் திருமணமாகாத நிலையில் இவரது கணவர் காலமாகிய போதும் இவர் உறுதியாக செயற்பட்டு பிள்ளைகள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆறு மருமக்களுக்கும் ஒரு சிறந்த தாயாகவும், மாமியாகவும் அறிவுரை கூறி வழிநடத்தி அவர்களது அன்புக்கும் பாத்திரமானார்.

தனது பிள்ளைகள் ஆறின் மூலம் கிடைத்த பதின்மூன்று பேரப் பிள்ளைகளையும் அன்புகாட்டி அரவணைத்து அறிவுரைகள் கூறி பாடமும் கற்பித்து அவர்கள் அனைவரதும் அன்பிற்கும் பாசத்திற்கும் பாத்திரமான பாட்டியாகத் திகழ்ந்தார்.

அவர் தமது அனைத்துப் பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் செய்து முடித்து விட்டு 2017ம் ஆண்டு ஆவணி மாதம் 11ம் திகதி காலை 7.00 மணியளவில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

எமது அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– குடும்பத்தினர் –



வாழ்க்கை பிடிக்கவில்லை என்றால் தற்கோலை செய்துகொள். ஆனால் தற்கோலை செய்து கொள்ளும் அளவிற்கு துணிவிருந்தால் வாழ்ந்து பார்.

- அலெக்சாண்டர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மாணிக்கம்

இறப்பும் பிறப்பும் இயற்கையின் நியதி. இதற்கு எவரும் விதிவிலக்கல்ல. ஏறாவூர் 5ம் குறிச்சியில் பிறந்து 1990 ஆம் ஆண்டு கலவரத்தின் பின் மட்டக்களப்பில் தஞ்சம் புகுந்தவர் அமரர் கணேசமாணிக்கம் அவர்கள்.

ஏறாவூர் 5ம் குறிச்சியில் மிகவும் அமைதியான குடும்பத்தில் பிறந்தவர். சைவமும், சாந்தமும் தவழ்ந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, திருமணமாகி நல்ல குழுந்தைகளைப் பெற்று, சிறந்ததொரு குடும்ப பெண்ணாகவும், ஆரம்ப காலம் தொடக்கம் இறுதி வரை சேவை புரிந்த நல்லதொரு ஆசிரியையாகவும் வாழ்ந்து காட்டி மறைந்தவர் அமரர் கணேசமாணிக்கம்

நான் பிறந்து, வளர்ந்த காலம் தொடக்கம் இன்றுவரை எங்கள் குடும்பத்துடன் இணைந்து அன்பு காட்டி பிணைந்து நின்றவர். எனக்கு விபரம் தெரிந்த காலம் தொட்டு ஆரம்பகால ஆசிரியையாக எனக்கு அறிவூட்டியவர். அவரின் ஆரம்பகால கல்வி வளமே இன்று நாங்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்கு வழி சமைத்தது. எங்கள் வீட்டிற்கு முன் வீடு தான் அவரும் பிறந்து வளர்ந்த வீடு. அவரது தாயார் பொன்னுமாணிக்கம் சிறந்த சைவப்பழம். தந்தையாரை எனக்கு தெரியாது, எனக்கு விபரம் வருவதற்கு முன்பே அவர் காலமாகிவிட்டார். பொன்னுமாணிக்கம் தாயாரின் அரவணைப்பில் மூத்தவர் நவரெட்னையா, அடுத்தவர் கணேசமாணிக்கம், இளையவர் கிருஷ்ணானந்தா இந்த நால்வரையும் தான் எனக்கு நன்கு தெரியும். இந்த நால்வரும் எங்கள் குடும்பத்தாருடன் நேசமுடன் பழகி, அன்பு காட்டி மறைந்து தெய்வமாகிவிட்டனர்.

அமரர் கணேசமாணிக்கம் அவர்கள் ஆசிரியையாக எனக்கு ஆரம்பக்கல்வியூட்டியவர். அவர் இறக்கும் வரை எங்கள் இன்ப துன்பங்களை கேட்டறிந்து, ஆலோசனைகளை வழங்கியவர். இவரது கணவர் அமரர் சிவனடியார் திருநாவுக்கரசு அவர்கள் சிறந்த ஆசிரியராகவும், பின்னாளில் அதிபராகவும் பல இடங்களில் கடமை புரிந்து நன்மதிப்பை பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு இருவரின் திருமணம் ஏறாவூர் 5ம் குறிச்சியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றதை நான் இன்றும் மறக்கவில்லை. அதேபோல் அவர்கள் இருவருக்கும் பிறந்த நல்லொழுக்கமும், பண்பும் கொண்ட பிள்ளைகளும், அவர்கள் இன்றுவரை எங்கள் குடும்பத்தாருடன் பிணைந்து நின்று அன்பு காட்டிடும் மனப்பாங்கையும் மறக்க முடியாது. என்னுடன் மட்டுமல்லாது எனது தாயார், தந்தையார், சகோதரங்களுடன் என்றும் பிரியமாக இருந்தவர்கள் அமரர் திருநாவுக்கரசு அவர்களும், அமரர் கணேசமாணிக்கம் அவர்களுமாவார்.

எங்கள் வீடு முன் வீடு என்பதால், ஏதும் என்றால் ஓடிச் செல்வோம், அது போல் அவர்களும் ஏதும் என்றால் ஓடி வந்து உதவி நிற்கும் கரங்களாக இருந்தனர். இத்தகைய உறவு கொண்டிருந்த எங்களுக்கு 1990 ஆண்டு கலவரத்தின் பின் கணேசமாணிக்கம் அவர்களின் குடும்பம் மட்டக்களப்பு சென்றதால், இடைவெளி ஏற்பட்டதும், அவரது மக்கள் செல்வங்கள் எங்கு கண்டாலும் அண்ணன் என உரிமையுடன் என்னை அழைத்து சுகம் விசாரிப்பதில் என்றும் பின்னின்றதில்லை. அந்தளவு கணேசமாணிக்கம் அக்கா அவர்களும், பிள்ளைகளும் எங்களை நேசித்து வந்தவர்கள். அக்கா என்றுதான் நாங்கள் அவரை அழைப்போம்.

கணேசமாணிக்கம் அக்கா இறந்து விட்டார் என்று கேள்விபட்டதும் மிகவும் வேதனையடைந்தேன். எங்கள் வீட்டிற்கு முன்னால் இருந்து அவரும் அவரது உறவுகளும் காட்டிய அன்பும் ஆதரவும் என் முன்னால் நிழலாடிக் கொண்டிருக்கின்றன. ஏறாவூர் 5ம் குறிச்சி ஸ்ரீ மதுமலக்கா வீரபத்திர சுவாமி ஆலயத்தில் எனக்கு அறிவு எட்டிய காலம் தொடக்கம் கணேசமாணிக்கம் அவர்களின் குடும்பம் சைவத்தை வளர்ப்பதற்காக பாடுபட்டவர்கள். இவரது தமையனார் நவரெட்னையா கூட்டுப் பிரார்த்தனைகள், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடாத்தியதோடு, முக்கியமான தினங்களில் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி சைவத்தையும் தேவார திருவாசகங்களின் பெருமையையும் உணர்த்தி 5ம் குறிச்சி மக்களுக்கு அறிவூட்டியதை எவரும் எளிதில் மறந்துவிட முடியாது. அதுபோல் அமரர் கணேசமாணிக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் தான் ஆசிரியையாகிய காலம் தொடக்கம் அவர் சேவையை விட்டு நீங்கும் வரை ஏறாவூர் 5ம் குறிச்சி, 4ம் குறிச்சி மக்களுக்கு அறிவூட்டி தெளிவூட்டி கல்வி புகட்டியதை எவரும் மறந்து விடவில்லை.

இத்தகைய பெருமை மிக்க சைவம், தமிழ் தழைத்தோங்கிய குடும்பத்தில் பிறந்து நல்லதொரு குடும்ப விளக்காக திகழ்ந்த அமரர் கணேசமாணிக்கம் அவர்கள் மறைந்தாலும், மறைந்தும் மறையாத கணேசமாணிக்கமாகவே மறைந்துள்ளார். இவருடைய இறப்பு ஆடிமாத தேய்பிறை சங்கடசதுர்த்தி எனும் கணேசபெருமானின் உயர்ந்ததொரு திதியில் நடந்துள்ளது. இந்த திதியில் இறப்பது எவருக்கும் கிடைக்காத பெரும்பாக்கியமாகும். அந்தப் பாக்கியத்தை பெற்ற மாணிக்கம் மறைந்தாலும் அவரின் அன்பும், பாசமும், அவர் புரிந்த சேவையும் எங்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். அவர் ஆத்மா இறைவன் திருவருளை அடைந்து நிலையானதொரு முத்திநிலை பெற இந்நாளில் இறையருளை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

எஸ். தெய்வநாயகம்
ஏறாவூர் – 05





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் கவிதை

அன்புடன் மண்ணில் “அ, ஆ” அறிவித்து
ஆதரவாக ஆளுமை, ஆற்றல் பழக்கி
இதுதான் கல்வியென்று எமக்குப் புரியவைத்து
ஈன்ற தாய்போல ஈகை உணர்வு காட்டி

உண்ணக் கொடுக்கும் தாய்போல கல்விக் கண்ணைத் திறந்து
ஊர்க் கல்விக் கூடத்தில் உயர்சேவை புரிந்தாய்
எமக்குள் ஒருவராக எங்களூரில் வாழ்ந்த
ஏந்திழை எம் கணேசமாணிக்கம் அக்கா

ஐயோவென உம்மக்களும், உறவுகளும் கதற
ஒருத்தியாய் வந்தேனென்றா உலகை விட்டுப் பிரிந்தாய்?
ஓடி விட்டாய் உலகை விட்டு, ஓடவில்லை மனதை விட்டு
ஔடதமாய் அனைவருக்கும் ஆறுதலளித்த ஆசானே

அடைவாய் என்றும் சாந்தி அம்மா
அடைவாய் என்றும் சாந்தி அம்மா

கனத்த மனதுடன் உங்களிடம் ஆரம்பக்கல்வி கற்ற
அன்பு மாணவன்

சீனித்தம்பி செல்வராஜா
(ஓய்வுநிலை அதிபர்)
561 / 28, லயன்ஸ் 5ம் குறுக்கு,
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நீங்காத நினைவில் எனது அப்பம்மா....


மாதா, பிதா, குரு, தெய்வம் என்று பெரியோர் கூறுவர். இவர்களுக்கு அடுத்ததாக நான் எனது கண்ணால் கண்ட தெய்வம் எனது அப்பம்மா. இவர் சிறு வயது முதல் எனக்கு பல அறிவுரைகளைக் கூறியுள்ளார். "காலையும், மாலையும் கை, கால், முகம் கழுவி கடவுளை வணங்க வேண்டும். பிறருக்கு இல்லை என்று கூறாது வாரி வழங்க வேண்டும்" என்று கூறுவார். "ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதீர்கள். ஏழைகளில் இறைவனைக் காணுங்கள். கடவுள் எமது அன்பிற்குக் கட்டுப்படுவார்." என்பார். "வாழ்க்கை அற்புதமானது. இவ்வுலகில் வாழ நாம் கடும் தவம் செய்ய வேண்டும்." என்று கூறுவார். "பிரச்சினைகளைக் கண்டு அஞ்சாமல் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டும் மனிதர்களுக்கு பிரச்சினைகள் வருவது சகஜம்" என்பார். "பெற்றோர், பெரியோரை மதிக்க வேண்டும். மாதாவும், பிதாவும் எமது கண்கண்ட தெய்வம்" என்று கூறுவார். "கடமை தவறக்கூடாது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அவசியம்" என்பார். "இவ்வுலகில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடில்லை யாவரையும் சமமாக மதிக்க வேண்டும்" என்று கூறுவார். "அதிகம் பேசுவதை விட மௌனமே சிறந்தது. நீங்கள் உலகத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும்" என்று கூறுவார். "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்பார். இவர் கூறிய அறிவுரைகளை நான் இன்றுவரை கடைப்பிடித்து வருகிறேன். நான் இன்றுவரை பல விடயங்களில் வெற்றி பெறுவதற்கு எனது அப்பம்மாவின் அறிவுரைகளே உந்து சக்தியாய் அமைந்தன. எனக்கு சிறுவயது பிராயத்தில் அவர் என்னைப் பார்ப்பதற்காக எனது வீட்டிற்கு அடிக்கடி வந்து தங்குவார். அச் சந்தர்ப்பத்தில் எனக்கு பல புராணக் கதைகளையும் அவரது வாழ்க்கை அனுபவங்களையும் கூறியுள்ளார். "பாட்டி வடை சுட்ட கதை, நளன் - தமயந்தியின் கதை, முருகனின் திருவிளையாடல்கள், 63 நாயன்மார் வரலாறு, கண்ணப்பநாயனார் கதை, வரகுண பாண்டியனின் கதை, மங்கையற்கரசி கதை" என்பன எனது அப்பம்மா எனக்குக் கூறிய கதைகளாகும். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பாடசாலையில் (Nursury) படிக்கும் போது எனது அப்பம்மா என்னை ஒரு தடவை முருகன் ஆலயத்திற்கு அழைத்து சென்றார். சிறுவயதில் நான் குறும்புக்காரன் எனவே நான் ஆலயத்தில் பல இடங்களுக்கு மாறிமாறி ஓடிச் செல்வேன். அப்போது அவர் என் பின்னாலே வந்து என்னைக் கண்காணித்தார். இதன் மூலம் அவர் என்மேல் கொண்டிருந்த அக்கறையை நான் புரிந்து கொண்டேன். எனக்கு ஒவ்வொரு வருடமும் பிறந்தநாள் வரும் போது என்னை ஆலயத்துக்கு அழைத்துச் செல்வதுடன் புத்தாடை வாங்கித் தருவார். நான் புலமைப்பரிசில் பரீட்சை எழுதமுன்னும், க.பொ.த சாதாரணப் பரீட்சை எழுத முன்னும் என்னை அழைத்து ஆசீர்வதித்தார். இரண்டிலும் நான் வெற்றி பெற்றேன். எனது சிறுவயதில் ஒரு சத்திரசிகிச்சை மேற்கொண்டபோது எனக்காக எனது அப்பம்மா பல நேர்த்திக் கடன்களை மேற்கொண்டார். அவர் என்மீது உயிரையே வைத்திருந்தார். நானும் அவர் மீது மிகுந்த பாசமும், மரியாதையும் கொண்டுள்ளேன். அவர் இன்று எங்களை விட்டுப் பிரிந்தாலும் அவரது வார்த்தைகள் இன்றும் எனது காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ரவிச்சத்திரன் யதுஷன்
(பேரன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மாவின் நீங்காத நினைவுகள்

அன்புக்கு அடித்தளமாய் பாசத்திற்கு உறைவிடமாய்
திகழ்ந்த என் அன்பு அம்மம்மாவே
நல்லதொரு ஆசானாக மற்றவருக்கு நல்ல எடுத்துக்காட்டாக
திகழ்ந்தவர் நீரே....
குடும்பத்திற்கு ஓர் குத்து விளக்கின் அடித்தளமாய்
இருந்தவர் நீர்
உதவி செய்யும் உள்ளத்தோடும் உதவி கேட்டு
இல்லை என்ற வார்த்தையை சொல்லாதவராக
நீர் இருந்தீரே..... இன்று எங்கு சென்று
விட்டீர்கள் அம்மம்மா

நான் உங்களை வீடு தேடி வரும் வேளையில்
அம்மம்மா என்று அழைத்தால் என்னை
இன்முகத்தோடு திரும்பி பார்ப்பீரே
பின் என் கரங்களை பற்றிப் பிடித்து இங்கு
வந்து இரு என்று கூறி என்னோடு அளவளாவுவீர்களே
இனி யார் என்னோடு அளவளாவுவார்கள்
என் ஆசை அம்மம்மாவே

நான் ஓடோடி வரும் வேளையில் எல்லாம்
எப்போது வந்தாய்? யாருடன் வந்தாய்? சாப்பிட்டீரா?
நன்றாக படிக்க வேண்டும் என்ற வார்த்தைகள்
இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இறந்த செய்தி என்னை பெரிதும்
அதிர்ச்சிக்குள்ளாக்கியது காரணம்
நான் இறுதியாக பார்த்துவிட்டு சென்று
ஒரு வாரம் கூட முடியவில்லை
அதற்குள் காலன் உங்களை என்னிடமிருந்து
பிரித்து விட்டான்

தேடுகின்றேன் நான் தேய்ந்தது முப்பத்தொன்று
இன்று வரை உங்களை காணாது கலங்குகின்றேன்
என்றாலும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றேன்.

சுந்தரமூர்த்தி பிரணவன்
(பேரன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Grandma

There isn't a grandma sweeter than a grandma like you

Our hearts are filled with love in everything you do.

Your kind worthy advices are instilled in our hearts.


We learned a lot from you through the years.

We'll promise your love is bigger than the world.

Our grandma's love is everlasting in our hearts.

Our love is true and, we love you so much grandma!

Loving Grandkids
**Shanju and Shaan**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# In Memory of My Loving Amma

Amma, you're my most cherished loved one,
You loved me so dearly,
You're so precious and so unique,
No one can ever fill your place easily.

At last minute when I stood by your side,
I couldn't believe your golden heart stopped beating,
your active body at rest,
My heart was almost bursting.

I wanted you to stay always,
Amma, you're not only a kind mother
Also a true friend and a saviour for me,
I love to rest again in your lap forever.

I never heard a harsh word from your lip,
But only the tender lovely kisses and kind words,
I never felt a single slap with your arms,
But only the affectionate embraces and hugs,

You left me beautiful memories
Your lovely words are my guide
I loved you dearly when you're alive,
And I love you forever till I come by your side.

Ever Loving daughter
**Nimalini**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our beloved grandma's memories

She is a special lady
She was a wonderful mother to our father
Her smile made anyone had a better day
Times spent with grandma were often marked by love and laughter
she always brought a family together and made everyone feels special
she radiated warmth and love
Every time she came to see us, she always brought gifts
She told best stories
when we were young she used to take us to Murugan temple
she touched so many lives in her own special way
she used to say she never touch money like Ramakrishnar Paramahamsar
she touched the heart and soul of every one who met her.
She would tell us stories about our grand father. Who died early on keeping his memory alive
In my mind I still hear my grand mother's voice and the words she spoke every day
How great the world would be, If we spoke to every one the way you spoke to me
She thinks about her children and grand children day and night and love them
She blessed us with her strong inner sprit and bravery.
We have a special place for you in our heart
We won't be counting the years which pass, But counting all of the wonderful memories she has left with us.

Grand Sons
**Yathushan & Mayushan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புத் தாயே!

என் அன்புத் தாயே!

உன் பிரிவால் துன்புறும்

உன் அன்புமகன் எழுதுவது;

உன் அன்புக் கணவர்

திடீரென்று உங்களை

விட்டுப் பிரிந்தபோது

நீங்கள் தனியாக

குடும்பச் சுமையை நெஞ்சில்

சுமந்து வேலைச் சுமையை

கைகளில் சுமந்தீர்கள்.

எங்களுக்காக அல்லும் பகலும்

அயராது உழைத்தீர்கள்

உங்கள் பிள்ளைகள் அறுவரையும்

நித்தம் நித்தம் அன்புதனைச் செலுத்தி

எங்களுக்குச் சிறந்த ஆசானாக

இருந்ததுபோல் உங்கள்

ஆசிரியத் தொழிலால் ஆயிரக் கணக்கானோர்க்கு

சிறந்த ஆசானாய்த் திகழ்ந்தீர்கள்.

உங்களுக்கென்றுஓர் இலட்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டென்றால் அது எங்கள்

ஆசைகளை நிறைவேற்றுவதாகத்தானிருந்தது.

உங்கள் ஆசைகள்பலவும் நீங்கள் துறந்தீர்கள்

எங்களுக்காகவே கடைசிவரை வாழ்ந்தீர்கள்.

உங்களைப் போல் ஓர் அம்மாவை நான் பெற்றது

நான் செய்தபுண்ணியம். ஏழேழுஜென்மமும்

உங்களையே என் அம்மாவாக அடைய நான் ஆசைப்படுகின்றேன்.

கடந்த தை மாதம் நான் அங்குவந்து

உங்களுடன் உரையாடியது பசுமையாக என் மனதில் அகலாது இருக்கிறது.

ஆனால் சுமையாகவே மாறிவிட்டது.

நீங்கள் திடீரென்று எங்களை விட்டுப் பிரிந்து சென்றது

உங்கள் பிரிவின் வலி எங்களைக் கொல்கிறது.

அன்பு அன்னையே!

உங்களைத் தரணியில் புகழ் பாட

எங்கள் வாயினில் வார்த்தைகளே இல்லை.

உங்களைக் கற்பனை பண்ணிக் கவிதை எழுத

என் மனதினில் இருந்து வார்த்தைகளும் வரவில்லை.

உங்களை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது

நீங்கள் எங்களுக்கு ஒரு தெய்வம்

உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு

**மகன் நிமலச்சந்திரன், மருமகள் நிஷ்சாந்தி**

**பேத்தி நிமாஷா, பேரன் நிமாஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரின் சிந்தனைகள்

ௐ தன்னிடமுள்ள நம்பிக்கை இல்லாதவனே நாத்திகன் கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவனை நாத்திகன் என்று பழைய மதங்கள் கூறின. புது மதமோ தன்னிடம் நம்பிக்கை இல்லாதவனே நாத்திகன் என்கிறது.

ௐ எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள் உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால் பலவீனர்கள் ஆவீர்கள், வலிமையானவர்களாக நினைத்தால் வலிமை மிக்கவர்கள் ஆவீர்கள்.

ௐ பலவீனத்திற்குப் பரிகாரம் பலத்தை நினைப்பதே தவிர, பலவீனத்தை நினைப்பதல்ல

ௐ யாருக்காகவும் எதுக்காகவும் காத்திருக்காதே உன்னால் முடிந்ததைச் செய்

ௐ தன்னைப்பற்றி மிகவும் எச்சரிக்கையாக உள்ளவன் அடிக்கடி ஆபத்தில் விழுகிறான்; மானம் போய்விடுமோ என்ற பயத்திலேயே உள்ளவன் அவமானத்தையே அடைகிறான்; நஷ்டத்தை எண்ணி அஞ்சுபவன் நஷ்டமே அடைகிறான் - இதுவே நான் வாழ்க்கையில் கண்டது.

ௐ நான் எந்தக் குறைபாட்டையும் தாங்கிக் கொள்வேன் ஆனால் கோழைத்தனத்தை மட்டும் தாங்க முடியாது.

ௐ திடமான நம்பிக்கைகளே பெரும் செயல்களுக்கு வழிவகுக்கும்

ௐ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவையே வெற்றிக்கு இன்றியமையாத மூன்று

ௐ ''முடியாது என்னால் இயலாது'' என்று மட்டம் செல்லாதீர்கள் நீங்கள் எல்லையற்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ நீ விரும்பும் வலுவும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

ௐ உன் விதிக்கு நீயே காரணம்

ௐ பிறரிடமிருந்து கற்றுக் கொள்ள மறுப்பவன் செத்தவனே

ௐ நீ தலைவனாக விரும்பினால் அனைவருக்கும் தொண்டனாகு

ௐ அடக்கப்பட்டு சரியான வழியில் செலுத்தப்பட்ட மனம், நம்மைக் காத்து இரட்சிக்கும்.

ௐ தான் எதற்கும் உபயோகம் அற்றவன் என்று இரவு பகலாக எண்ணிக் கொண்டிருக்கும் ஒருவனிடமிருந்து எந்த நன்மையும் பிறக்காது.

ௐ எழுந்திரு, விழித்திரு லட்சியத்தை அடையும் வரை நில்லாமல் செல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளை யுள்ளத்
தண்டா மாரைக்குத் தகாதுகொலோ?
சகம் ஏழும்மளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்(து)
ஆகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமழ்த் தெள்ளம (து)
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்திக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வி சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நா வினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!

பஞ்சப் (பு) பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்(து) அல ராததென்னே?
நெடுந் தாட் கமலத் (து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் (து) திருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும்
திஞ்சொற் பனுவலுதீம்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய், உளங் கொண்டுதொண்டர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும்
மும்கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந் தடிமைகொள்
வாய், நளி னாசனம்சேர்
செல்விக்(கு) அரிதென்(று) ஒருகால
மும்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாய், படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவாசகச் சிறப்பு வெண்பா



திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்ல லறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி!
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பனியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோறும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் மிலாப் புண்ணியனே
காக்கும் எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப்புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிகீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை
ஓம் சரவணபவ நம :
(தேவராய சுவாமிகள் அருளிய)



# கந்தர் சஷ்டி கவசம்



### காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நூல்
### நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ் செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரஹண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த வழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்நெறி நெற்றியும் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளி பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேள் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முருண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் காக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் காளியோடைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடிதுய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்(து) அரனை பருஅரை யாப்பும்
எல்லாப் பியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென்மீதுன் மனமகிழ் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துட அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்கள் உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைத் தாமரை

வெள்ளைத்தாமரைப் பூவில் இருப்பாள்
வீணைசெய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவுகவிதை
கூறுபாவலர் உள்ளத்தில் இருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் - (வெள்ளை)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடி வாகிடப் பெற்றாள் - (வெள்ளை)

வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு
வாழு மாந்தர்க் குலதெய்வமாவாள்
வெஞ்ச மற்குயிர் ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம் - (வெள்ளை)

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வம் என்ற கருத்துடை யோர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரினிக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கை வருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம் - (வெள்ளை)

செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்துத் தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட்கே செய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி யதன்மேல்
சந்தனத்தை மலரையிடுவோர்
சாத்திரம் மிவள் பூசனை யன்றாம் - (வெள்ளை)

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடுகல்வி யிலாத தொருரைத்
தீய னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் - (வெள்ளை)

ஊணர் தேசம் யவனர் தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப பார் சிகப் பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ் கடற்கப் புறத்தினில இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவியி னொளிமிகுந் தோங்க - (வெள்ளை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
        நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனமின்று பெரிதிழைக் கின்றீர்
        ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மானமற்று விலங்குக ளொப்ப
        மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ
போன தற்கு வருந்துதல் வேண்டா
        புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர் - (வெள்ளை)

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
        இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
        ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
        பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
        ஆங்கோதர ஏழைக் கெழுத் தறி வித்தல் - (வெள்ளை)

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
        நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவும் அற்றவர் வாய்ச் சொல்ருளீர்
        ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
        வாணி பூசைக் குரியென பேசீர்!
எதுவும் நல்கி யிங் கெவ்வகை யானும்
        இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்! - (வெள்ளை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்ச புராணப் பாடல்கள்

## ஞாயிற்றுக்கிழமை

### 1. தேவாரம்

திருஞானசம்பந்தர்

பண் - சீகாமரம் திருச்சிற்றம்பலம் (2ம் திருமுறை)

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே.

### 2. திருவாசகம்

மாணிக்கவாசகர்

(8ம் திருமுறை)

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

### 3. திருவிசைப்பா

கருவூர்த்தேவர்

பண் - காந்தாரம் (9ம் திருமுறை)

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருப்பல்லாண்டு

**சேந்தனார்**

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருளளவு இல்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே!

## 5. பெரியபுராணம்

**சேக்கிழார்**

(12ம் திருமுறை)

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி,
பேதியா வேகமாகிப், பெண்ணுமாய் ஆணுமாகிப்,
போதியா நிற்கும்தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்

# திங்கட்கிழமை

## 1. தேவாரம்

**திருஞானசம்பந்தர்**

பண் - கொல்லி திருச்சிற்றம்பலம் (3ம் திருமுறை)

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருவாசகம்

மாணிக்கவாசகர்

(8ம் திருமுறை)

நானேயோ தவம்செய்தேன்? சிவாயநமஎனப் பெற்றேன்
தேனாயின் அமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுளம் புகுந்து, அடியேற்கு அருள்செய் தான்
ஊன்ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்துஅன்றே வெறுத்திடவே

## 3. திருவிசைப்பா

பூந்துருத்தி நம்பிகாடநம்பி

பண் - சாளரபாணி

(9ம் திருமுறை)

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளும் தானு மணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே

## 4. திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் - பஞ்சமம்

(9ம் திருமுறை)

சொல்லாண்ட கருதிப்பொருள் சோதித்த
தூமனத் தொண்ட ருள்ளீர்!
சில்லாண்டில் சிதையும் சில
தேவர் சிறுநெறி சேராமே.
ல்ஆண்ட கனகத் திரள்
மேருவிடங்கள் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதம்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## 5. பெரியபுராணம்

சேக்கிழார்

(12ம் திருமுறை)

தூயவெண்நீறு துதைந்தபொன் மேனியும், தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும், தைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும், பதிகச்செஞ் சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய்க்கிழமை

### 1. தேவாரம்

திருநாவுக்கரசு நாயனார்

திருவிருத்தம் திருச்சிற்றம்பலம் (4ம் திருமுறை)

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன்தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன்தன் அடியோங் களுக்கே!

### 2. திருவாசகம்

மாணிக்கவாசகர்

(8ம் திருமுறை)

காலம் உண்டாகவே காதல்செய்து உய்மின், கருதரிய
ஞாலம் உன்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான்எங்கள் பாண்டிப்பிரான் தன்அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்துமுந்துமினே!

### 3. திருவிசைப்பா

பூந்துருத்தி நம்பிகாடநம்பி

பண் - சாளரபாணி (9ம் திருமுறை)

சுளையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் னாடரங்கே!

### 4. திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்?
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பெரியபுராணம்

**சேக்கிழார்**

(12ம் திருமுறை)

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள,
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

## புதன்கிழமை

## 1. தேவாரம்

**திருநாவுக்கரசர்**

திருத்தாண்டகம் திருச்சிற்றம்பலம் (6ம் திருமுறை)

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறம்ஒருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர் பறித்திட்டு உண்ணாராகில்
அருநோய்கள் கெடவண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவர் றேதோவென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே!

## 2. திருவாசகம்

**மாணிக்கவாசகர்**

(8ம் திருமுறை)

வேண்டத் தக்க தறிவோய் நீ!
வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன் மார்க் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண் டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

**சேந்தனார்**

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

ஏக நாயகனை இமயவர்க் கரசை
என்உயிர்க் கமுதினை, எதிரில்
போக நாயகனை, புயல்வணற்கு அருளிப்
பொன்நெடும் சிவிகையா யூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழிலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே!

## 4. திருப்பல்லாண்டு

**சேந்தனார்**

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## 5. பெரியபுராணம்

**சேக்கிழார்**

(12ம் திருமுறை)

சிவனடியெ சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பதமதனை ஆறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வுஅரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழக்கிழமை

### 1. தேவாரம்

சுந்தரர்

பண் - கொல்லி திருச்சிற்றம்பலம் (7ம் திருமுறை)

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும்ஐயுற வில்லையே!

### 2. திருவாசகம்

மாணிக்கவாசகர்

(8ம் திருமுறை)

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ?
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே!

### 3. திருவிசைப்பா

கருவூர்த்தேவர்

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

தந்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்டு
அத்திலங், கொருகூறு உன்கண்வைத் தவருக்கு
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருப்பல்லாண்டு

**சேந்தனார்**

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

தாதையைத் தாள் அற வீசிய
சண்டிக்குஅவ் வண்டத்தோடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொன்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாத கத்துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## 5. பெரியபுராணம்

**சேக்கிழார்**

(12ம் திருமுறை)

ஞானத்தின் திருவுருவை, நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக் கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

திருச்சிற்றம்பலம்

# வெள்ளிக்கிழமை

## 1. தேவாரம்

**சுந்தரர்**

பண் - தக்கேசி திருச்சிற்றம்பலம் (7ம் திருமுறை)

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை யென் பிழையைப் பொறுப்பானை
இழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையனென் றறிய வொண்ணா
எம்மானை, எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல்பழனத் தணி
ஆரூரானை மறக்கலு மாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருவாசகம்

மாணிக்கவாசகர்

(8ம் திருமுறை)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்
விரையார் கழற் கென்
கைதான் தலை வைத்து கண்ணீர்
ததும்பி, வெதும்பி உள்ளம்
பொய்தனர் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய பொற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்,
என்னைக் கண்டு கொள்ளே!

## 3. திருவிசைப்பா

திருவாலியமுதனார்

பண் - இந்தளம் (9ம் திருமுறை)

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் உமையள் காண
விகிர்தன் ஆடுமே.

## 4. திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
மழவடி யாரொடும் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பெரியபுராணம்

**சேக்கிழார்**

(12ம் திருமுறை)

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென் றுரைப்பார்

திருச்சிற்றம்பலம்

**சனிக்கிழமை**

## 1. தேவாரம்

**திருநாவுக்கரசர்**

திருவிருத்தம் திருச்சிற்றம்பலம் (4ம் திருமுறை)

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் னுள்ளமும் நானும் கிடந்தலந்தெய்த் தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரே
ஒருபற் றிலாமையும் கண்டிரங் காய்ச்சி யேகம்பனே.

## 2. திருவாசகம்

**மாணிக்கவாசகர்**

(8ம் திருமுறை)

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்த தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்று நீ அல்லை, அன்றியொன் றில்லை,
யாருன்னை அறியகிற் பாரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

கண்டராதித்தர்

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
"தெத்தே" யென்று வண்டுபாடும் தென்தில்லை யம்பலத்துள்,
அத்தா, உந்தன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ

## 4. திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் - பஞ்சமம் (9ம் திருமுறை)

நிட்டைஇலா வுடல்நீத்து என்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச் சீராட்டும்
அட்டமூர்த்திக்கு, என்அகம் நெகவூறும்
அமர்தினுக்கு, ஆலநிழல்
பட்டனுக்கு, என்னைத்தன்பாற் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## 5. பெரியபுராணம்

சேக்கிழார்

(12ம் திருமுறை)

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**21 - 10 - 1931**



**மறைவு**
**11 - 08 - 2017**

# திருமதி கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

***அவர்கள் 11.08.2017ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.***

அன்னார் காலஞ்சென்ற **திருநாவுக்கரசு** (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் (காலஞ்சென்ற) **செல்லத்தம்பி, பொன்னம்மாணிக்கம்** ஆகியோரின் அன்பு மகளும் (காலஞ்சென்ற) **நவரெட்ணையா** (விவசாய விசாலிப்பாளர்) **கேதாரகிருஸ்ணானந்தா** (பிரதம குடிவரவு குடிஅகல்வு அதிகாரி) ஆகியோரின் சகோதரியும் (காலஞ்சென்ற) **சிவனடியான், கனகம்மா** ஆகியோரின் அன்பு மருமகளும், **சந்திராவாலி, ரவிச்சந்திரன்** (ஓய்வு பெற்ற அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, மட்டக்களப்பு), **நிமலச்சந்திரன்** (முன்னாள் முகாமையாளர், இலங்கை வங்கி - அவுஸ்ரேலியா), **சுபாஷ்சந்திரன்** (சுங்கத் திணைக்களம், கொழும்பு), **சுபாஷினி** (அதிபர், மட்/ அருணோதய வித்தியாலயம்), **நிமலினி** (ஆசிரியை, மட்/ தெரேசா பெண்கள் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், **சுந்தரமூர்த்தி** (ஓய்வுபெற்ற அதிபர்), **மேகலா** (பிராந்திய மலேரியாத் தடுப்பு வைத்திய அதிகாரி), **நிஷாந்தி** (முன்னாள் H.N.B உத்தியோகத்தர் - அவுஸரேலியா), **தமயந்தி** (வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு), **ரவிதேவன்** (அதிபர், மட்/ தளவாய் விக்னேஸ்வரா வித்தியாலயம்), **பேரின்பராஜா** (உதவி விவசாய பணிப்பாளர், மட்டக்களப்பு) ஆகியோரின் மாமியாரும்,

காலஞ்சென்ற **எழில்நுபன், பிரணவன், வித்தியாசாகர், டிசாருஷன், தவக்ஷான்** (புனித மிக்கல் கல்லூரி), **தெனியுக்தா** ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், **யதுஷன், மயூஷன், நிட்டாஷன், நிமாஷா** (அவுஸ்ரேலியா), **அபிஷிக்கா, தக்ஷிக்கா** (வின்சன்ட் மகளிர் கல்லூரி) **தக்ஷனவ்** ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.03, மருதடி வீதி, மட்டக்களப்பு இல்லத்தில் இருந்து 13.08.2017ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு கள்ளியங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.**

***தகவல்: குடும்பத்தினர்***

மொழி கொம்பியூட்டேஷன் 077 444660



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணத்தின் போது




பேரப்பிள்ளைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவன் பிள்ளைகளுடன்



மகனுடன் இந்தியா சென்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



85 ஆவது பிறந்ததினம்



மூத்த மகனின் திருமணத்தில் பிள்ளைகளுடன்



மகளின் திருமணத்தில் மகன்மாருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி.கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு

-பிறப்பு- 21.10.1931

- இறப்பு - 11.08.2017

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள்**
**ஏறாவூர்ப்பற்று-01 கல்விக்கோட்டம்**

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி.கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு

தோற்றம் 21.10.1931

மறைவு 11.08.2017

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகம்
மட்/தளவாய் விக்னேஸ்வரா வித்தியாலயம், செங்கலடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

## திருமதி.கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு

- மண் மகிழ -
21.10.1931

- கண் நெகிழ -
11.08.2017

அவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலேரியா தடைப்பிரிவு [illegible] உத்தியோகத்தர்கள்
மட்டக்களப்பு

---

உணர்வுகளின் சங்கமத்தில், உதிர்கின்ற

# விழிநீர் அஞ்சலி

அதிபர்கள் நலன்புரிச்சங்கம்
மண்முனை வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/மட்/அருணோதய வித்தியாலயம்
BT/BT/ARUNOTHAYA VIDYALAYAM

# விழிநீர் அஞ்சலி

அன்னாரின் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்கள்

**மட்/மட்/அருணோதய வித்தியாலயம்**

# துயர் பகிர்கின்றோம்

கல்லறையில் நிம்மதி தேடி காற்றோடு கலந்து விட்டீர் உன்
கனவுகள் எல்லாம் கானல் நீராய் கண்ணீர் மட்டும் நிரந்தரமாய்!
கருவறையில் இருந்து இறங்கி கல்லறை நோக்கி
நடந்து செல்லும் தூரம் தான் வாழ்க்கை

பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு
**எமது! ஆழ்ந்த அனுதாபங்கள்!**

பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம் விவசாயத் திணைக்களம்,
மட்டக்களப்பு

# கண்ணீர் அஞ்சலி



**திருமதி.கணேசமாணிக்கம் திருநாவுக்கரசு**

-பிறப்பு-
21.10.1931

- இறப்பு -
11.08.2017

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்,
உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிழக்கு மாகாண தெளிகருவி இயக்குனர் சங்கம்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

White!
The smell of talcum on her
clothes,
Three Vibuthi streaks across her
forechead,
Her wispy hair braided down her
back,
Her heart was as pure as gold,
Her words were as sweet as
milk,
Her endearments were as soft
as snow,
Her kindred soul was as
beautiful as a dove.
She is the very embodiment of
the colour white,
As white is a colour of peace
I Pray she acheives it,
For she deserves it, morethan
anyone else
Dear appamma,
We love you forever and always,
Your grand daughter and grand son,
Nimaashaa and Nimaashawn


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

11.08.2017 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்ததும் வருகை தந்து உடனிருந்து ஆறுதலளித்தவர்கள், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், மலர்மாலை, மலர்வளையம் சாத்தியும், பதாதைகள் மூலமும் அஞ்சலி செலுத்தியவர்கள் மற்றும் அனைத்துக் காரியங்களிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**இவ்வண்ணம்**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வம்ச விருட்சம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ
அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடைய தாகிறது
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகிறது
"இதுவே உலக நியதியும் எனது படைப்பின்
சாராம்சமுமாகும்"



- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Evergreen Printers, Batticaloa. 065 2222607

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org